# 4

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# இது எவ்வாறு சாத்தியம் ஆகின்றது?

*பிதாவின் வலது புறத்தில் இளவரசராகவும் இரட்சகராகவும் உயர்த்தப் படுவதற்காக இயேசு இந்த பூமியை விட்டுச் செல்வதற்குச் சற்று முன்பாக, அவர் தமது சீஷர்களிடத்தில், "நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக். 24:49ஆ) என்று கூறினார். இயேசு தம் மரணத்திற்கு முன்பே கூட, சகல சத்தியத்திலும் அவர்களை வழிநடத்தக் கூடிய பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். மீண்டும் அவர், "அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" (அப். 1:4, 5).*

*இந்தக் கட்டளையைக் கொடுத்த உடனே இயேசு அவர்களிடத்தில் இருந்து மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார், "அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது" (அப். 1:9ஆ) "அப்பொழுது அவர்கள் ... எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்" (அப். 1:12). அப். 2ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:*

> *... அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். (அப். 2:1-4; 1:9-12ஐயும் வாசிக்கவும்.)*

*இது, அப்போஸ்தலர்கள் உன்னதத்திலிருந்து வரும் வல்லமையினால் தரிக்கப்படுவார்கள் என்று இரட்சகர் அளித்த வாக்குறுதியின் நிறைவேற்றத்தினுடைய பதிவேடாக உள்ளது. அந்த சத்தியமானது வேதாகமத்தைக்*

கற்றுக்கொள்ளும் மதிநுட்பமுள்ள மாணவர் எவராலும் மறுக்கப்படாது. அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி அவர்களுக்கு (மொழிகளில்) பேசும் வல்லமை தரும் வரையிலும் அவர்கள் உலகத்தை மீட்கச் செல்லுதல் என்பது நமது கர்த்தர் சித்தம் கொண்டிராததாக இருந்தது. எனவே அவர்கள் இவ்வித வல்லமையினால் தரிப்பிக்கப்பட்ட பிறகு செய்தவை பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாயிருந்தது என்று நாம் நியாயமாக முடிவு செய்யலாம். அவர் எதைச் செய்யும்படி வந்தாரோ, அதைச் செய்தார், அதாவது அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளாகவும் வழிநடத்தினார் என்பதில் எவரொருவரும் சந்தேகப்படக் கூடாது. அதன் பிறகு எப்பொழுதுமே, போதகர்கள் என்ற வகையில் அவர்களின் ஊழிய மானது பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாகவே இருந்தது. அவர்களைப் பின்பற்றுதல் என்பது உறுதியாகவே, பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றுவதாகவே உள்ளது.

உன்னதத்திலிருந்து வந்த பலத்தினால் நிரப்பப்பட்ட அப்போஸ்தலர் களினால் செய்யப்பட்ட ஊழியத்திற்கு முரணாகச் செல்லுகின்றவராய் எவரொருவரும் இருந்தால், அவர் தமது மத வாழ்வில் பரிசுத்த ஆவியான வரின் வழிகாட்டுதலை உரிமைகோர முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பரிசுத்த ஆவியானவரால் மத வாழ்விலும் நடைமுறை யிலும் வழி நடத்தப்படும் மதம் சார்ந்த நபர், ஆவியானவருடைய வல்லமையினால் தரிக்கப்பட்டவர்களின் வாழ்வு மற்றும் நடைமுறை ஆகியவற்றிற்கு இசைந்த வகையிலேயே இருக்கின்றார். தெய்வீக ஆவியானவரால் வழிநடத்தப்பட்டவர்களை உண்மையுடன் பின்பற்று கின்ற எவரும், நாமகரணத்துவத்திலிருந்து விடுதலையானவராகவே இருக்கின்றார், அவர் எந்த ஒரு நாமகரணத்தையும் சேர்ந்தவரல்ல. அவர் ஒரு கிறிஸ்தவராக மட்டும், கர்த்தரின் சீஷராக மட்டும் இருக்கின்றார். இந்த போதகர்களினால் காட்டப்பட்ட வழிகாட்டுதலைப் பின்பற்றும் யாவரும் இவர்கள் சார்ந்திருந்த தேவனுடைய சபையாகிய அதே சபையின் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இந்த வல்லமையினால் வழிநடத்தப் பட்ட மக்களைப் போன்றே இதே வழியில் தேவனுடைய சபையில் மக்கள் இன்றைய நாட்களில் உறுப்பினர்களாகின்றனர். அதாவது, அவர்கள் ‘‘சபையில் சேர’’வில்லை, ஆனால் தேவன் தம்மால் இரட்சிக்கப் பட்டவர்களை “இரட்சிக்கப்பட்டவர்கள்” என்ற வகையில் தமது சபையில் சேர்த்துக் கொண்டார். இவ்விதமாக, இரட்சிக்கப்பட்டவர்கள் அவருடைய சபையாய் இருந்தார்கள். பரிசுத்த ஆவியானவரை உண்மையாய்ப் பின்பற்றுகின்றவர் எவரும் இரட்சிக்கப்படுவார் என்பதைப் பற்றியோ அல்லது எருசலேமில் பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றியவர்கள் மீது தேவன் அன்பாயிருந்ததுபோலவே இவர்கள்மீதும் அன்பாயிருப்பார் என்பது பற்றியோ எவரொருவரும் கேள்வியெழுப்ப மாட்டார் என்பது நிச்சயம். இந்தக் கருத்துக்கள் உண்மை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டால், இப்படிப்பட்ட ஒவ்வொருவரும் கர்த்தரால் இரட்சிக்கப்பட்டு, அவருடைய சபையில் சேர்க்கப்படுகின்றனர் என்று நாம் புரிந்து கொள்கின்றோம்.

இந்த போதனையைத் தவறாகப் புரிந்து கொள்ளாதபடிக்கு

வாசகருடைய இருதயத்தின் நேர்மையும் நற்பண்பும் நம்பப்பட வேண்டும். இரட்சிப்புக்கென்று ஒருவர் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படலாம் என்பதும், அவர் தேவனுடைய சபையிலேயே சேர்க்கப்படலாம் என்பதும் உண்மையாக உள்ளது, ஆனால் பிறகு நாமகரணத்துவத்தினுள் செல்கிறார், ஒரு நாமகரணக் கூட்டத்துடன் "சேர்ந்து கொள்கிறார்" அல்லது இணைந்து கொள்கிறார். இவ்வாறு செய்கின்றவர் எவரும் ஒரு நாமகரணக் கிறிஸ்தவராக, இரு சபைகளுக்கு உரியவராக ஆகின்றார்; ஏனெனில் அவர் இரட்சிக்கப்பட்ட பொழுது நமது கர்த்தருடைய சபையில் சேர்க்கப் பட்டார், ஆனால் அதன் பிறகு அவர் மனிதரால் உண்டாக்கப்பட்ட சபை என்று அழைக்கப்படும் ஒரு நிறுவனத்தில் சேர்ந்து கொண்டார். இதே செயல்தான் நற்குணம் உள்ள இருதயம் கொண்டோரால் சில வேளைகளில் செய்யப்படுகின்றது. இருப்பினும், ஒரு நாமகரணக் கூட்டத்தார் ஆவதற்கான படிநிலை ஒவ்வொன்றிற்கும் பரிசுத்த ஆவியானவரின் போதனைக்கு அப்பால் செல்வதும், அவருடைய உண்மையான வேண்டுகோள்களுக்கு முரண்பாடாகச் செல்வதும் தேவைப்படுகின்றது.

நாமகரணத்துவம் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவரின் முன்மாதிரிக்கும் எதிரிடையாக இருக்கிறது, மற்றும் புதிய ஏற்பாட்டு வரலாற்றில் உள்ள ஒவ்வொரு சபைக்கும் முரண்பாடாகவே உள்ளது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்கள் அல்லது தீர்க்கதரிசிகளினால் வழிநடத்தப்பட்ட கிறிஸ்தவர்களில் ஒருவராவது ஒரு நாமகரணக் கூட்டத்தில் சேர ஒருக்காலும் வழிநடத்தப்படவில்லை. கிறிஸ்தவர் என்பதை விட அதிகமானவராகின்ற ஒருவர் - கர்த்தருடைய சீஷர் அல்லது அவருடைய பரிசுத்த சபையின் உறுப்பினர் என்பதை விட அதிகமானவராகின்ற ஒருவர் - தேவனுடைய சொந்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்ட பரிசுத்த மனிதர்களின் அறிவுறுத்தல்கள் மற்றும் உதாரணங்கள் ஆகியவற்றிற்குப் புறம்பாகச் செல்லுவதில் தாமே பொறுப்புடையவராக இருக்கின்றார்.

இப்படிப்பட்ட பொறுப்பு நிலை ஒன்றிற்கு எதிராகத் தேவன் வேண்டுகோள் விடுத்திருந்தும், இந்நிலையை ஏற்றுக்கொள்ள ஒருவர் விரும்பினால், அது அவருடைய விவகாரம் ஆகும்; ஆனால் பொறுப்பை அவரது கதவருகில் வைப்பது என்பது எனது வேலையாக உள்ளது. நான் அதை அங்கேயே வைக்கின்றேன். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்தது போலவே இன்றும் கிறிஸ்தவர்களாக மட்டும் இருத்தல் என்பது மக்களுக்கு மிகவும் சுலபமானதாக உள்ளது; மக்கள் இவ்வாறு இல்லாமல் போவதற்கு அவர்களின் மனவிருப்பம் இல்லாமையோ அல்லது கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்களை அவர்கள் அறிவதில் உள்ள (அறிவுக்) குறைபாடோதான் காரணமாகின்றது.

சீஷர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் வந்தவுடனேயே, ஒரு பெரிய சபைக் குழுவானது ஒன்றுகூடியது. பேதுரு - அல்லது பேதுருவை ஒரு கருவியாகப் பயன்படுத்திய பரிசுத்த ஆவியானவர் - அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பிரசங்கிக்கத் தொடங்குவதற்குப் பற்றிக் கொண்டார். சீஷர்கள்மீது வல்லமை இறங்கி வரும் வரைக்கும் அவர்கள் எருசலேமுக்குச் சென்று அங்கு

காத்திருக்க வேண்டும் என்று இயேசு அவர்களுக்குக் கூறியிருந்தார். அதன் பிறகு அவர்கள் படைப்பு அனைத்திற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சென்று, காத்திருந்தார்கள், மற்றும் பரிசுத்த ஆவியானவர் வந்து அவர்களுக்குள் பிரவேசித்தார்; இவ்விதமாய் அவர்கள் பிரசங்கிக்கத் தயார் செய்யப்பட்டனர்.

பேதுரு ஒரு நாமகரணமற்ற கிறிஸ்தவராக அல்லது சீஷராக இருந்தார். நாமகரணமற்ற போதகர் மற்றும் பிரசங்கியார் என்ற வகையில் அவர் நாமகரணக்கூட்டம் எதையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை; அவர், இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் சேர்க்கும் சபையில் மட்டுமே ஒரு உறுப்பினராயிருந்தார். எனவே அவரது ஊழியமானது நாமகரணமற்ற ஊழியமாகவும், நாமகரணம் எதையும் கட்டியெழுப்பாததாயும் இருந்தது என்பது நிச்சயம். கர்த்தருடைய சொந்தத் தந்தையாகிய தேவனை ஆராதிப்பதற்கென்று தொலைவிலிருந்தும் அண்மை யிலிருந்தும் வந்திருந்த யூதர்களே அவரது உரையைக் கேட்டார்கள். இவர்கள் அர்ப்பணிப்புள்ள யூதர்களாக, வாழ்வில் மிகுந்த மதப்பற்றும் ஒப்படைப்பும் உள்ளவர்களாக இருக்கையில், அவர்கள் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்திருந்ததில்லை. அவர்களின் இருதயங்களில் இந்த அவிசுவாசத் துடனேயே அவர்கள் கூடினார்கள்; ஆகையால் இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அவர்களுக்குச் செயல்விளக்கமூட்டும் பாரம் பேதுருவின் பிரசங்கத்தில் இருந்தது. இந்த பெந்தெகொஸ்தேக்கு ஐம்பது நாட்களுக்கு முன்பு, இதே யூதர்கள் ஒரு வஞ்சகனைத் தாங்கள் மரணத்திற்கு உட்படுத்துவதாக நம்பி, தங்கள் விரல்களை இயேசுவின் இரத்தத்தினால் கறைப்படுத்திக் கொண்டிருந்தனர். பேதுரு தம் உரையைக் கேட்பதற்கு - உலக சிந்தையுள்ள மக்களாகவோ, நாத்திகர்களாகவோ இல்லாதிருந்த ஆனால் - எபிரெயரின் பிள்ளைகள் மற்றும் தானியேலைப் போல தேவனு டைய ஊழியத்திற்காக மரிக்கவும் தயாராக இருந்த மக்கள் கூட்டத்தைப் பெற்றிருந்தார். இவர்கள் ஜெபத்தினால் நிறைந்தவர்களாக, வைராக்கியம் உடையவர்களாக மற்றும் தேவபக்தியுடையவர்களாக - நிச்சயமாகவே இந்த நிகழ்ச்சிக்கேற்ற நல்ல மக்களாகவே இருந்தார்கள்.

முதலில், அந்தக் காலை வேளையில் எருசலேமில் வல்லமையின் அற்புதமான வெளிப்பாடுகள் குறித்து அவர்களின் முன் அனுமானமும் தவறுமுள்ள கண்ணோட்டங்கள் சிலவற்றைப் பேதுரு நீக்கிப் போட்டார். இதை அவர், அவர்களுடைய வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டியதன் மூலம் செய்தார். பின்பு அவர் தமது பிரசங்கத்தைத் தொடங்கினார்:

> இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித் திருந்த ஆலோசனையின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே

*சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள். தேவன் ... அவரை எழுப்பினார் (அப். 2:22-24அ).*

இந்தச் சுருக்கமான உரையில் பேதுருவின் மூலம் பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் வாழ்வைப் பிரசங்கித்தார். அவருடைய அற்புதங்கள், வல்லமையான செயல்கள், அடையாளங்கள் மற்றும் தமது பிள்ளைக்குத் தேவனுடைய அங்கீகாரம் ஆகியவற்றைப் பற்றி அவர் எடுத்துரைத்தார். அவரது உரையைக் கேட்டவர்கள் அக்கிரமக்காரர்களைப் பயன்படுத்தி தேவனுடைய குமாரனைச் சிலுவையில் அறைந்து கொன்றதாகவும், தேவன் அவரை மரித்தோரில் இருந்து எழுப்பியதாகவும் அறிவித்தார். மரித்தோரிலிருந்து திரும்பி வந்த அந்த இயேசுவே பாவங்களுக்குப் பலியாக அளிக்கப்பட வேண்டியவராயிருந்தார் என்பது நிரூபிக்கப்பட வேண்டியதாயிருந்தது. மக்களால் ஒரு தெய்வீகப் போதகரென்றும் எழுத்தாளர் என்றும் நம்பப்பட்டிருந்தவரான இஸ்ரவேலரின் இனிமையான பாடகரான தாவீதின் கூற்றுக்களில் இருந்து ஆதாரத்தை ஆவியானவர் அறிமுகப் படுத்தினார். அந்த மேற்கோளில் இருந்து, யாரோ ஒருவரின் உயிர்த்தெழுதலைப் பற்றித் தாவீது பேசினார் என்பது உறுதியாய் இருந்தது: ஒன்று, அவர் தமது சொந்த உயிர்த்தெழுதலைப் பற்றி அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும் அல்லது அவர் வேறொருவரின் வாயில் மொழிநடையை இட்டிருக்க வேண்டும். தாவீது மரித்திருந்தார், அவர் அடக்கம் செய்யப் பட்டிருந்தார், மற்றும் அவரது கல்லறை அந்த நாள் வரையிலும் அவர்களிடையே இருந்தது என்ற உண்மைகளை ஆவியானவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். ஆகையால், அவர் தம்மைப் பற்றி இவ்வாறு அர்த்தப்படுத்தியிருக்க முடியாது என்பதால், அவர் யாரை அர்த்தப்படுத்தினார்? தாவீதின் வம்சத்தில் தோன்றும் அவருடைய கர்ப்பக் கனியொன்றை அவரது அரியணையில் அமர்த்துவதாகத் தேவன் ஆணையிட்டார் என்பதைத் தீர்க்கதரிசி என்ற வகையில் அறிந்திருந்த தாவீது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றியே பேசினார்:

*இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்: இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறது மாகிய இதைப் பொழிந்தருளினார் ... ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் (அப். 2:32-36).*

இது, நேர்மையும் ஒப்புக்கொடுத்தலும் கொண்ட இந்த மக்களின் இருதயங்களில் குற்றம் செய்திருந்த உணர்வை ஏற்படுத்தப் போதுமானதாயிருந்தது. இந்த வேளையில் அவர்கள் தங்கள் கரங்களில் இரத்தக் கறைகளைக் காணவும், தங்கள் இருதயங்களில் தேவனுடைய சொந்த குமாரனையே கொலை செய்திருந்த குற்றுணர்வை உணரவும் போதுமானதாயிருந்தது. “இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்

*பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்" (அப். 2:37).*

*அவர்கள் இணக்கம் கொள்ளப்பட்டார்களா? யார் அதைப் பற்றிச் சந்தேகிக்க முடியும்? ஐம்பது நாட்களுக்கு முன்பு தாங்கள் சிலுவையில் அறைந்தவரே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று இந்த அழுது கொண்டிருக்கும் மக்கள் விசுவாசம் கொண்டார்களா? தேவன் தமது வல்லமையான அடையாளங்களினால் அவரை (இயேசுவை) அங்கீகரித் திருந்ததை அவர்கள் சந்தேகப்பட்டார்களா? அவர்கள் செய்யும்படி ஆவியானவர் கூறியிருந்ததை இப்பொழுது அவர்கள் செய்திருந்தார்களா? அதாவது, தேவன் அவரை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்பதை அவர்கள் ''நிச்சயமாய் அறிந்திருந்தார்களா?'' சுவிசேஷத்தின் இந்த மாபெரும் உண்மையை அவர்கள் உண்மையிலேயே அறிந்திருந்தால், மற்றும் பேதுருவில் இருந்த ஆவியானவர் அவர்கள் இதை அறியும்படியாக கூறினார் என்று அறிந்திருந்தால் - அதாவது சந்தேகமின்றி "நிச்சயமாக" முழு நம்பிக்கையுடன் அறிந்திருந்தால் - விசுவாசம் கொள்ள அவர்களிடத்தில் குறைவுபட்டிருந்தது என்ன? இயேசு தேவனுடைய சொந்தப் பிள்ளை என்பதை ஒருவர் சந்தேகம் எதுவுமின்றி முழு நம்பிக்கையுடன் அறிய வேண்டும்; அதாவது அவருடைய வல்லமையான செயல்கள் தேவன் அவருக்கு அளித்திருந்த அங்கீகாரமாய் இருந்தன; அதாவது, அவர் சிலுவையில் அறையப்பட்டு, மரித்தோரிலிருந்து எழுந்து, மற்றும் "ஆண்டவரும் கிறிஸ்துவுமாக" தேவனுடைய வலது கரத்திற்கு உயர்த்தப் பட்டார். இதை ஒருவர் முழு நம்பிக்கையுடன் உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு, அவர் விசுவாசிப்பதற்கு இன்னும் செய்ய வேண்டியதென்ன? அவர் தம் இருதயத்தில் இந்த மாபெரும் உண்மைகளை தைரியமாய் ஏற்றுக் கொண்டு, இருதயத்தில் குத்தப்பட்டவராக ''நான் என்ன செய்ய வேண்டும்?" என்று ஒருவர் கதறுவார் என்றால் அவர் விசுவாசிக்க வேண்டும் என்று கூறத் தேவையா? இன்னும் அவர் விசுவாசிக்க வேண்டியது என்ன, மற்றும் அதை அவர் எவ்வாறு விசுவாசிப்பார்?*

*விசுவாசம் கொண்ட இந்த மக்களுக்கு - இயேசுவைப் பற்றிய மாபெரும் சத்தியங்களை உறுதிப்படுத்திக்கொண்ட குற்றம் உணர்த்தப் பட்ட இந்த மக்களுக்கு பரிசுத்த ஆவியானவர் பின்வருமாறு கூறினார்:*

> *நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர் கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது (அப். 2:38, 39).*

*தெய்வீகப் பதிவேடானது அடுத்து நமக்குப் பின்வருமாறு கூறுகின்றது: "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் ... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர்*

அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" (அப். 2:41-47ஆ).

நாம் மறுகண்ணோட்டமிடும் "சபை கூடுதல்" என்பது நாமகரண மற்றதாக இருந்தது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். உலகத்தை மீட்கும் ஊழியத்தில் இருந்த சபையொன்றை நாம் நோக்குகின்றோம். இந்தப் போதனையானது நமது கர்த்தரால் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து வந்தது, மற்றும் அவர் எந்த மனிதர் மூலம் பேசினாரோ அந்த மனிதர் நாமகரணமற்ற இந்த சபையின் உறுப்பினராக, கிறிஸ்தவராக மட்டுமே இருந்தார். இந்தப் போதனை எல்லாம் நாமகரணமற்ற போதனையாக, தூய்மையும் எளிமைத் தன்மையும் கொண்டதாக இருந்தது. நாமகரணமற்ற இந்த சபை கூடுதலில், நாமகரணமற்ற இந்த போதகர் இயேசுவே "ஆண்டவரும் கிறிஸ்துவுமாய்" இருக்கின்றார் என்று சந்தேகமின்றி "உறுதியாய் அறிந்து கொள்ளும்"படிக்கு அவிசுவாசிகளை அழைத்தார். தங்கள் இருதயங்களில் அறிந்து, குற்றம் உணர்த்தப்பட்ட யாவரும் "நீங்கள் மனந்திரும்புங்கள்" என்று கட்டளை பெற்றார்கள். இவ்விதமாக, நாமகரணமற்ற இந்தக் கூடுதலில், இரட்சிக்கப் படாத மக்கள் சுவிசேஷத்தின் மாபெரும் உண்மைகளை சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளும்படி கட்டளைபெற்று, பிறகு மனந்திரும்பும்படி கூறப்பட்டு, மற்றும் இறுதியாக "பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்"படி கட்டளையிடப்பட்டார்கள்.

எனவே, மறுக்க முடியாத தர்க்கத்தினால், இன்றைய நாட்களில் ஒருவர் அன்று பேதுரு செய்தது போலவே இயேசுவைப் பிரசங்கிக்கின்ற பொழுது அது நாமகரணமற்ற போதனையாகவே உள்ளது. அவ்விதம் செய்வதற்கு, அவர் இயேசுவை, தேவனுடைய அங்கீகாரம் பெற்ற குமாரன் என்றும், உயிர்த்தெழுந்து, முடிசூட்டப்பட்ட ஆண்டவர் மற்றும் கிறிஸ்து என்றும் பிரசங்கிக்க வேண்டும். அவர் இரட்சிக்கப்படாதவர்களை விசுவாசிக்கும் படி அழைக்க வேண்டும் அல்லது "உறுதியாய்" அறிந்துகொள்ளும்படி அழைக்க வேண்டும். பிறகு அவர், இந்த சத்தியங்களை அறிந்த யாவரும் மனந்திரும்பி, அவர்களின் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி புத்தி கூற வேண்டும்.

அது போலவே, இயேசுவே ஆண்டவரும் கிறிஸ்துவுமாய் இருக்கிறார் என்று "உறுதியாய்" அறிந்ததினால் இருதயத்தில் குத்தப்படுகின்றவர்கள், மனந்திரும்புகின்றவர்கள், மற்றும் தனது பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுகின்றவர்கள் ஒவ்வொரு வரும் இரட்சிக்கப்படுகின்றனர். இவ்விதமாக அவர் கர்த்தருடைய சீஷராக, கிறிஸ்தவராக மட்டும் ஆகி, நமது கர்த்தருடைய சபையில் சேர்க்கப் படுகின்றார். நமது கற்றலுக்காக பதிவு செய்யப்பட்டுள்ள ஆவியானவரின் ஊழியத்தை அப்படியே இன்றைய நாட்களில் செய்கின்ற சபையின் ஊழியமானது தேவனால் அங்கீகரிக்கப்பட்டதாகவும், ஆவியானவரால் இயக்கப்படுவதாகவும், இந்த நாமகரணமற்ற கூடுதலைப் போன்றதாகவும் உள்ளது. இது அவ்விதம் இல்லையென்றால், வேதாகமம் நமக்கு எந்த வித மதிப்பும் இல்லாததாக இருக்கும்.